சுஜாதா என்கிற ஆளுமை

பொ. கருணாகரமூர்த்தி
(ஒரு பேப்பருக்காக)



முன்பெல்லாம் சுஜாதாவை நினைத்தால் உடம்பெல்லாம் ஒருவகைப் பரவசமும் உற்சாகமும் தொற்றிக்கொள்ளும். 27.02.2008 க்குப் பிறகெல்லாம் ஒரு அத்யந்த நண்பனை, உறவை இழந்ததுபோல துக்கமே நெஞ்சை வந்து அடைக்கிறது. ஒரு இலக்கியர் 'மறைந்தது எஸ்.ரங்கராஜன்தான் சுஜாதா அல்ல' என்று எழுதியதை திரும்ப திரும்ப வாசிக்கையிலும், ஆரோக்கியம் முற்றாக குலைந்து அவர் ஸ்தூலதேகம் ஓய்வெடுக்க முனைகையில் அதுதரவல்ல தொந்தரவுகளை உபத்திரவங்களையும் தாங்கிக்கொண்டும் அவர் பிழைத்திருக்கவேண்டும் என ஆசைப்படுவது எவ்வளவு விபரீதமானஆசை என்பதை யோசித்துப்பார்க்கையிலும் மனசு கொஞ்சம்போல சமாதானமாகிறது.

மஹராஜபுரம் சந்தானம், சுந்தரராமசாமி என்று நான் நேரில் சந்திக்க ஆசை மிகப்பட்டு அவை ஒருபோதும் கைகூடாமல் போன சந்தர்ப்பங்கள் பலவுண்டேயெனினும் சுஜாதாவும் அதை நிராசையாக்குவாரென்று துளிகூட எதிர்பார்க்கவில்லை.

சுஜாதா என்கிற பல்துறை ஆர்வலனை ஆளுமையை எப்போது தெரிந்துகொண்டேன் என்பதை உறுதியாகச் சொல்வது கஷ்டம். ஆனாலும் அது ஆனந்தவிகடன் அல்லது குமுதம் மூலமாகத்தான் நேர்ந்திருக்கும். சமகாலத்தில் தமிழில் மாத்திரமல்ல உலகஅரங்கில் நடைபெறும் அனைத்து இலக்கிய - விஞ்ஞான மாற்றங்களையும் அவர் அறிந்திருந்தார். அவரளவுக்கு பெரும்வாசகர்களைக்கொண்டிருந்த தமிழ் எழுத்தாளர்கள் எவருமில்லை என்பதுவும் நிதர்சனங்கள். சுஜாதாவின் படைப்புக்களின் தனித்துவம் அழகு என்பதெல்லாம் அவரது மொழி நடைதான். சிறிய சிறிய வசனங்களில் மிகச் சிக்கனமான வார்த்தைகள்தான் அவர் பலம். மற்றது கதையின் நிகழ்வுகளை காட்சிரூபத்தில் உருவமைத்து விரைந்து நகர்த்திச்செல்லுதல். ' ரங்கு கடையா அது ஆறுக்கு ஒன்பதில் ஒரு சதுரம் ஐந்தாறு போத்தல்களில் ஒன்றுக்குள் கொஞ்சம் ஸ்லேட் பென்சில்களும், மற்றையவற்றுக்குள் மிட்டாய், கமெர்கெட் வித்தியாசமான நிற ங்களில் இருக்கும். பின் பக்கமாக தூங்கும் சாக்குத்திரையின் பின்னால் நாங்கள் சிகரெட் பிடிக்க அங்கு அடிக்கடி கூடுவோம் என்று எளிமைப்பட எழுதியிருப்பார் சுஜாதா, ஆனால் அதற்குள் சகல விபரிப்புகளும் அடங்கியேயிருக்கும்.

சுஜாதா 1953ல் தனது முதற்கதையை சிவாஜி என்கிற இதழில் எழுதிவிட்டிருந்தார். அதன்பிறகு 'இடது கண் ஓரத்தில்' என்கிற அவரது இரண்டாவது கதை குமுதத்தில் வெளியாவதற்கு ஒன்பது வருடங்கள் பிடிக்கின்றன. இந்த இடைக்காலத்திலான அவரது இலக்கிய முயற்சிகளை அவர் எவ்விடத்திலும் பதிவு செய்யவில்லை. 'முதற்கதையை அச்சில் பார்த்த அன்று தான் அடைந்த பரவசத்தை வாழ்வில் பின்னெ ாரு நாளும் அடைந்ததில்லை' என்கிறார் ஓரிடத்தில். கவனயீனத்தால் அப்பிரதியை எங்கோ தொலைத்துவிட்டதாகவும் வாசக அன்பர்கள் எவராவது அதனைத் தனக்கு அனுப்பிவைக்க முடிந்தால் தன் ராஜ்ஜியத்தில் பாதியைத்தருவதாகவும் பின்னர் எழுதினார்.

நான் கல்லூரி மாணவனாக இருந்த காலத்தில்தான்குமுதத்தில்அவரதுநைலோன் கயிறு அனிதா, இளம் மனைவி போன்ற நாவல்கள் வெளிவந்தன. நாவல்களுள் தின மணிக்கதிரில் 1972 ம் ஆண்டு அவர் தொடராக எழுதிய காயத்திரி என்கிற நாவல்தான் முதலில் படமாக்கப்பட்டது. இதில் கதாநாயகன் ரஜனிகாந்த். இதில் உலகமறியாத ஒரு பேதைப்பெண்ணாக சிறிதேவி நடித்திருந்தார். படம் தயாரானபின் அதை வெளியிடுவதில் தணிக்கைக்குழுவின் ஏகப்பட்ட கெடுபிடிகளுக்குஆளாகியதில்பலஇடங்களில் கத்தரிவைக்க நேர்ந்ததாக அறியமுடிகிறது. பின்னாளில் கனவுத்தொழிற்சாலை நாவலில் தணிக்கைக்குழுவினர் செய்யும் கெடுபிகள் பலவற்றை அங்கதம் சேர எழுதியிருப்பார்.

'நிறுத்து.நிறுத்து அங்ஙின கொஞ்சம் றீவை ண்ட் பண்ணுப்பா. தாவணி பறக்க ஓடியா றாளே.. கொஞ்சம் மாரு தெரியறாப்பல, சரியா பாருங்கப்பா. '

'இல்லைங்க மெடம் அப்படி ஒண்ணுந் தெரியல எல்லாம் சரியாத்தான் இருக்கு?'

'இருந்தாலும் அவ மாரு கொஞ்சம் அதிகமாத்தான் குலுங்குது..பார்க்கிறவாளை எக்ஸைட் பண்ணாது?'

'சரி அதைத் தூக்கிடவா?'

'தூக்கினாத்தான் அந்த மாமிக்கு திருப்தி, இரவு தூக்கம் வரும்'. இப்படியாகப்போகும்.

பின்னாளில் விகடனில் ப்ரியாவை (குறு நாவல்) நான் வாசித்தேன். இதுவும் படமாக்கப் பட்டது. இதிலும் ரஜனிதான் கதநாயகன். சுஜாதா இலண்டனில் நடப்பதுபோன்று அதன் கதையை அமைத்திருந்தார். ஆனால் அதைப் படமாகச்செய்தபோதோ தயாரிப்பின் வசதிகருதி கதையின் பகைப்புலத்தை மலேஷியாவாக மாற்றியிருந்தனர். நிகழ்வுகள் எதனுடனும்ஒட்டமுடியாமலும் செயற்கைத்தன ங்கள் நிறைந்ததாகவும் மாறிவிட்டிருந்தது பிரதி. ' ஏய்..... பாடலொன்று' என்கிற காபி ராகத்திலமைந்த புகழடைந்த பாடல் அப்படத்தில் வருவதுதான்.

அதன் பின்னான 'ரோஜா' தொடங்கி அவரது திரைப்பட ஈடுபாடுகளையும் பங்களிப்பு களையும் வாசகர்கள் அறிவார்கள். இன்னும் உங்களுக்கு ஆச்சர்யம் தரக்கூடிய ஒரு தகவல் சுஜாதா 70களின் நடுவில் வெளிவந்த 'மயங்குகிறாள் ஒரு மாது' என்கிற படத்தில் ஹொட்டல் ஒன்றில் வைத்து பொருட்பெண் ஒருவரைப் பேட்டிகாணச்செல்லும் ஒரு பத்திரிகையாளராக சிறிய பாகமேற்று நடித்துமிருக்கிறார் என்பது.

அவரது புனைகதை உலகத்தில் ஏறத்தாழ 250 சிறுகதைகள் எழுதியதாகச் சொல்லப்படுகிறது. அவற்றுள் சிறந்தவற்றை இச்சிறு கட்டுரையில் பட்டியலிடுவதென்பது கடினம். யாழ்நூலகம் எரியூட்டப்பட்ட பின்னால் அவர் மனம் நொந்து எழுதிய 'ஒரு லட்சம் புத்தகங்கள்' என்கிறகதை நிஜத்திலும் ஒரு லட்சம் பெறும்.

சிறுகதையைவிட கட்டுரை எழுதுவதுதான் அவருக்கு பிடித்தமானதாக இருந்திருக்கிறது. ஏனெனில் 'அதில்தான் உண்மையை விபரிப் புகள், சோடனைகள், கற்பனைகள், தாளிதங் கள் இல்லாது நேரடியாகச் சொல்லிவிடலாம். ஆனால்மக்கள்கட்டுரைகளைவிட கதைகளை மோகிப்பது நடைமுறைச்சோகமே' என அண்மையில் ஒரு பேட்டி ஒன்றில் சொல்லி இருக்கிறார். கட்டுரைகள் வரிசையில் அப்பா அன்புள்ள அப்பாவை, ஹைக்கூ ஒரு புதிய அறிமுகம், ஆழ்வார்கள் ஒரு எளிய அறிமுகம், கடவுள் இருக்கிறாரா? என்பன சிறந்தவை. அவரது நாவல்கள் எவையுமே 150 பக்கங்களுக்கு மேற்பட்டனவாக இருப்ப தில்லை. அவைகளுள் எப்போதும் பெண், கரையெல்லாம் செண்பகப்பூ, பெண் இயந்திரம், ப்ரியா, ஆதலினால் காதல் செய்வீர், ஏறக்குறைய சொர்க்கம், மூன்று நிமிஷா கணேஷ், கனவுத்தொழிற்சாலை என்பன மறக்கமுடியாதவை.

கணையாழி 1965 டில்லியிலிருந்து வெளிவந்த காலத்திருந்தே அதன் பின்புற உள் அட்டையில் அவர் உலகின் பல்வேறு விஷயங்கள் பற்றி தொடர்ந்து எழுதிவந்த 'சுஜாதாவின் கடைசிப்பக்கம்' கட்டுரைகளும், ஆனந்தவிகடனில் அண்மைக்காலம்வரை எழுதிவந்த 'கற்றதும் பெற்றதும்' கட்டுரைத்தொடரும் பிரசித்தமானவை.

தமிழில் எழுதியவர்களுள் சுந்தர ராமசாமி யையும், தி.ஜானகிராமனையும், நீலபத்மனா பனையும், கி.ராஜநாராயணனையும், கலாப்ரி யாவையும் அவருக்கு மிகவும் பிடிக்கும். நிஜத் தில் சுந்தரராமசாமி யாரென்று தெரியாமலே அவர் மலையாளத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்ததகழிசிவசங்கரப்பிள்ளையின் செம்மீனை முதலில் வாசித்திருந்தேன். சுஜாதா அறிமுகம் செய்தபின்னாலேயே எனக்கு அவரது காலச்சுவடு பத்திரிகையும், கஸ்தூரி ரங்கனின் கணையாழியும் தெரிய வந்தன. அதுபோலவே அவருடைய நவீன விஞ்ஞான அறிவும் அறிவியல் சார்ந்த புனைவுகளும் பிரசித்தமானவை. மீண்டும் ஜினோ என்கிற சிந்திக்கத்தெரிந்த ரொபோட் என்கிற கற்பனை நாயை உருவாக்கி அது பல அற்புதங்களைப் புரிவதாகப் பண்ணியுள்ளார்.

ஆரம்பத்தில் கணனி பரவலாக அறிமுக மாகாத காலத்தில் அதுபற்றிய பாலபாடங் களைக் கட்டுரைகளாக வடித்துத்தந்தவர். இன்று இந்தியாவில் பெருந்தொகையாகப் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் வாக்குப் பதியும் இயந்திரத்தை வடிவமைத்த குழுவின் தலைமை விஞ்ஞானி.

ஒரு எழுத்தாளனின் அக்கறைகள் எந்த அளவுக்கு பரந்த தளத்தில் இருக்க வேண்டுமென்பதற்கு சுஜாதா ஒரு இனிய உதாரணம். அவரது கவிதை சம்பந்தமான ஈடுபாடு சங்க இலக்கியங்களில் தொடங்கி மரபுக் கவிதைகள், புதுக்கவிதைகள், நாட்டார் பாடல்கள், ஹைக்கூ என விரிந்து சென்றன.

ஹைக்கூ கவிதைகள் பற்றி விஸ்தாரமாகக் கூறும் 'ஹைக்கூ ஒரு புதிய அறிமுகம்' எனும் நூலைத் தமிழ் இலக்கியத்துக்குத் தந்திருக் கிறார். வைணவ இலக்கியங்களின் மீது குறிப்பாக பத்து ஆழ்வார்களும் கூடிச்செய்த நாலாயிரத்திவ்யபிரபந்தத்தின்மேல் பெரும் மோகமும் ஆழ்ந்த அறிவும் கொண்டிருந்த சுஜாதா 'அறிவியலும் ஆன்மீகமும் ஒரு புள்ளி யில் பொருந்துவன' என்கிற நம்பிக்கை கொண் டிருந்தார். அவரது 'கடவுள் இருக்கிறாரா?' என்கிற நூலில் பிரபஞ்ச இரகசியங்கள் பல வற்றை விரித்துரைக்கவும் முற்படுகிறார். இன்னும் வைஷ்ணவத்தலங்கள் பலவற் றையும் அவ்வப்போது விரும்பிப் போய் சேவித்தும் இருக்கிறார்.

சுஜாதா என்றும் கவிதைகளில் கரைபவர். மு.மேத்தா அவ்வளவு அறியப்படாதவராக இருந்தகாலத்தில் தனது படைப்புக்களிடையே அவரது கவிதைகளைச் சேர்த்து மேற்கோள் காட்டி எழுதி மேத்தாவின் கவிதைகளை வாசகர்களால் கவனிக்கப்பட வைத்தார். மனுஷ்யபுத்திரன், நா. முத்துக்குமார்கூட அவரால் கண்டுபிடிக்கப்பட்டு கைதூக்கி விடப்பட்டவர்களே.

ஈழத்துக்கவிஞர்களுள் மஹாகவியையும், சேரனையும், வ.ஐ.ச.ஜெயபாலனையும் அவருக்கு மிகவும் பிடிக்கும். குறிப்பாக ஜெயபாலனது'சூரியனோடுபேசுதல்'கவிதைத் தொகுதியை விதந்து குங்குமத்தில் எழுதியுள் ளார். 'கொஞ்சம் விஸ்க்கி வைத்துக்கொண்டு ஜன்னலண்டை உட்கார்ந்து இயற்கை வெளிச்சத்தில் கவிதை படிப்பது இன்பம்' என்று ஒருமுறை சொன்னார். மகாகவி பாரதி யாரை அவர் வியந்தது ஆச்சர்யமில்லைத் தான். ஆனால் பாரதி படத்தின் கூட்டுத் தயாரிப்பாளர்களில் அவரும் ஒருவர் என்பது வும் பின்னாளில்தான் இணையத்தளம் ஒன்றிலிருந்துதான் அறியநேர்ந்தது.

என்னதான் நாலாயிரதிவ்யபிரபந்தத்திலும் சங்க இலக்கியத்திலும் குறளிலும் பரிபாட லிலும் ஆழனுபவமும், காதலும் மோகமும் இருந்தாலும் தன் படைப்புக்களில் இடத்துக் குத் தகுந்தமாதிரி ஆங்கில வசனங்களை அள்ளிவிடவும் அவர் தயங்கியதில்லை. ஆனால் அவற்றையும் தமிழில்தான் எழுதுவார், ஆங்கில வரிவடிவத்தைப் பாவிப்பதில்லை.

சுஜாதாவின் எழுத்தைப்பற்றி இரண்டு முக்கி யமான விமரிசனங்கள் இருந்தன, இருக்கின் றன. ஒன்று அவருக்கு இரண்டு முகங்கள் இருந்தன என்பது. அதாவது சிற்றிலக்கியப் பத்திரிகைகளில் ஒருவிதமாகவும், ஜனரஞ்சகப் பத்திரிகைகளில் வேறொரு விதமாகவும் எழுதுவது. மற்றது அவரது எழுத்துக்கள் சமூகப் பிரக்ஞையும் ஆழமும் குறைந்தன என்பது.

அவரது பரந்த எழுத்துப்பரப்பு முழுவதையும் நுணுகிப் பார்த்தால் எப்போதும் அவர் எழுத்தின் அடிநாதமாக ஊடுபாவாக மானுஷ நேயமும் அன்பும் இருந்தன என்பதில் சந்தேகமில்லை.

(தொடர்ச்சி 20ம் பக்கத்தில்)

SRI SIVASAKTHI ASTROLOGICAL CENTRE

Pandit Laxsmana Shastry
Specialist Astrologer

அகிலன் எண்டர்பிரைசஸ்
(Near Lakshmis Jewellers)
274 High Street North,
Easthamn, London E12 6SA

Tel: **07939 095 099**
07507 089 785

உலகத்தில் சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம், துன்பங்கள் நன்மை தீமைகள், பற்றிய விபரங்களைக் கூறுவார்.

இவரை ஒருமுறை சந்தியுங்கள். கைரேகை, பெயர் இராசி, லட்சுமி கடாட்சம், பொருள், அரசியல், உத்தியோகம், கல்வி, வியாபாரம், திருமணம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை காதல் கலியாணம், விசா பார்த்து சொல்லப்படும். நிலம், வீடு, யோகம் அதிஸ்ட நம்பர்கள் கோர்ட் வழக்குகள், எதிரிகளினால் மந்திரம், சூனியம், பேய், பிசாசு கண்திருட்டி, பரிகாரம் செய்வார்.

உடன் சந்தியுங்கள்.

Opening Hours; **9.30 am-8.30pm**-7days

He speaks English, Tamil, Telegu, Malayalam, Kannada and Hindi.